MUNICIPAL COUNCIL
JAFFNA

# இந்திய அரசு எடுக்கும் முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்கிறார் தொண்டா

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 27-7-86 ஞாயிறு (ஆடி 11 துல்க 19) முழக்கம் 173

(புதுடில்லி)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் மேலும் தீவிரமாக்கப்படவேண்டும் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்த போது கேட்டுக்கொண்டுள்ளார். புதுடில்லியில் இப்பொழுது தங்கியுள்ள அமைச்சர் தொண்டமான் இந்தியப் பிரதமரை நேற்று முன்தினம் சந்தித்து சுமார் இருபது நிமிடங்கள் வரையில் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இப்பொழுது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றி உரையாடினர். இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் தொண்டமான், தற்போதைய சூழ்நிலையில் பயன்தரத்தக்க வகையில் செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இந்திய வெளியுறவுகள் அமைச்சர் திரு. சிவ்சங்கர், இணையமைச்சர் கே. ஆர். நாராயணன், வெளியுறவுக் கொள்கை குழு ஆலோசகர் திரு. ஜீ. பார்த்தசாரதி ஆகியோரையும் அமைச்சர் தொண்டமான் சந்தித்துப் பேசினர்.

★ போராளிகள் குழுப் பிரதிநிதி அறிவிப்பு

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எங்களிடம் ஆலோசனை இல்லை!

## கூட்டணிப் பிரதிநிதிகள் இந்த வார நடுப்பகுதியில் டில்லி செல்ல ஏற்பாடு

(சென்னை)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சு நடத்துவது சம்பந்தமான ஆலோசனைகள் எதுவும் தம்மிடம் இல்லை என்று தமிழ்ப் போராளிகள் குழுவின் பிரதிநிதி ஒருவர் சென்னையில் தெரிவித்துள்ளார்.

இந்தியா அப்படியான ஒரு ஆலோசனையைக் கேட்டாலும் அதனை வலியுறுத்த தாம் தயாராக இருப்பதாக அப் பிரதிநிதி மேலும் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வாறான ஒரு பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு தாம் தடையாக இருக்கப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.

இதற்கிடையே போராளிகள் குழுக்களின் பிரமுகர்களைச் சந்தித்து, இலங்கையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றி எடுத்துக்கூற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆலோசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணியினர் இவ்வார நடுப்பகுதியில புதுடில்லி செல்லலாம் எனவும் தெரிவிக்கப் பட்டது.

## 32 மீனவர் குடும்பங்கட்கும் மூன்றுமாத இலவச உணவு

மண்டைதீவில் கடந்த ஜூன் மாதம் பத்தாம் திகதி படுகொலை செய்யப்பட்ட முப்பத்திரண்டு குருநகர்மீனவர்களின் குடும்பங்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய இலவச உப உணவுப் பொருட்களை வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதேபோல யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள திருமலைப்பகுதி அகதிகளுக்கும் இருநூற்று ஐம்பது ரூபா பெறுமதியானவீட்டு பாத்திரங்கள் வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து இங்கு இடம்பெயர்ந்த எண்ணூறு குடும்பங்களுக்கும் ஒரு வார காலம் இலவச உணவுப் பொருட்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்தே இந்த அனுமதிகள் வழங்கப்பட்டன.

## திருமலை செல்லும் போது

## படகுடன் கைதான மாணவர் கடற்படையால் விடுதலை!

(திருமலை)

முல்லைத்தீவிலிருந்து திருமலைக்கு இருபத்தொரு மாணவர்களுடனும் அவர்களதுபெற்றோர்களுடனும் செல்லும் போது கடலில் காணாமல் போன படகு பற்றிய மர்மம் தற்பொழுது துலங்கியுள்ளது.

கடந்த புதன் முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டுச்சென்றஇப் படகு இடையில் கடற்படையினரிடம் அகப்பட்டுக் கொண்டது படகையும் அதில் சென்றவர்களையும் கடற்படையினர் திருமலை கடற்படைத்தளத்

—6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவியில் குறைவான தமிழ் பயணிகள்

(வவுனியா)

கொழும்பில இருந்து நேற்று வவுனியா வந்த யாழ்தேவியில் சுமார் இருநூறு தமிழ் பிரயாணிகளே வந்தனர். யாழ்ப்பாணம் வரவேண்டியவர்கள் இரு பஸ்கள்மூலம் வவுனியாவில் இருந்து இங்கு உடனடியாக அனுப்பப்பட்டனர்.

## இலங்கை இளைஞர்கள் சிலர் லெபனான் ராணுவமுகாமில்

(பெய்ரூட்)

வேலைவாய்ப்புத் தேடி லெபனான் சென்ற இலங்கை இளைஞர்கள் சிலர் அங்குள்ள ராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முகாமின் மலசல கூடங்களை கழுவும் வேலையில் அமர்த்தப்பட்டனராம்.

ஏஜன்சி மூலம் அங்கு போவதற்கு அழைத்துச்செல்லப் பட்டு முதலில் சிரியா எல்லைக்கு சென்று அதனூடாக லெபனானுக்குள் நுழைய முயன்றபோது எல்லையிலுள்ள ராணுவத்தினரால் கைதுசெய்யப் பட்டு இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

இந்த இளைஞர்கள் தலா முப்பத்தோராயிரம் ரூபாவை ஏஜன்சிக்கு கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## தற்போதைய நிலைப்பாடு பற்றி புளொட் அறிக்கை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தற்போதைய நிலைப்பாடு பற்றி நேற்று யாழ்ப்பாணத்தில் விடுக்கப் பட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் பற்றிய அறிக்கைகள் பல செய்தி ஸ்தாபனங்களால் மிகைப்படுத்தப்பட்டும், குழப்பகரமான முறையிலும்வெளியிடப்பட்டுள்ளன. எமது போராட்டம் பலரது தியாகங்களால் இரத்தமும், வியர்வையும் சிந்தி எமது இலட்சியத்தை நோக்கி கடினமான பாதையில் வளர்க்கப்படுவதாகும். இதை உண

—6ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் 20,000 மக்கள் பங்குபற்றிய எழுச்சி ஊர்வலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் வரலாறு காணாத மாபெரும் மக்கள் எழுச்சி ஊர்வலம் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்டது. மாகாணசபையை எதிர்த்தும், ஜூலை அக்கிரமங்களைக் கண்டித்தும் கிளிநொச்சியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அரச பயங்கரவாத செயல்களைக் கண்டித்தும் இவ்வூர்வலம் நடாத்தப்பட்டது. இதே வேளை கிளிநொச்சிப் பகுதியிலுள்ள சிறு கிராமங்களிலுள்ள சின்னஞ்சிறு கடைகள் கூடப் பூட்டப்பட்டு பூரண ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

தோணுவில், அக்கராயன் குளம், உருத்திரபுரம், கனகாம்பிகைக்குளம் முதலான பகுதிகளிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்கள் பரந்தனில் ஒன்றிணைந்து முரசுமோட்டையை அடைய கண்டாவளை, புளியம்பொக்கணை தர்மபுரம் முதலான பகுதிகளிலிருந்து வந்த

—6ம் பக்கம் பார்க்க

## வீரசூரியா கப்பல் மீண்டும் பாலைதீவுகடலில்வந்துள்ளது

(குருநகர்)

கடற்படைக் கப்பலான 'வீரசூரியா'வின் நடமாட்டம் மீண்டும் குடாக்கடலில் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆழ்கடல்மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டு மாதக் கணக்ாகியும் தடை உத்தரவு நீக்கப் படாதவிடத்தும் சிறு தொழில்களான சிறகுவலை, கரைவலை, களங்கட்டித் தொழிலாளர் பரவைக் கடலில் தொழில் செய்து வருவதால் அவர்கள் மத்தியில் மேற்படி கப்பலின் நடமாட்டம் பீதியை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்

—6ஆம் பக்கம் பார்க்க

## மீனவரைக் காணவில்லை

(செம்பியன்பற்று)

தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் பத்து நாட்களாகியும் கடலிலிருந்து கரை திரும்பாத சோகச் சம்ப

...6ம் பக்கம் பார்க்க

## ஜீ. சீ. ஈ. உயர் பரீட்சை

## அனுமதிஅட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் கவனிக்க

அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் நாளை 28ம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டைகள் கிடை

... 6ம் பக்கம் பார்க்க

வடமராட்சி

# சுருக்கெழுத்து கழகத்தின் சேவை மிக விரிவுபட்டது

(வல்வெட்டித்துறை)

"வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் தமிழ் தட்டச்சு பயிற்சி நிலையம், அங்கத்தவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். குறுகியகாலத்தில் ஐந்து இடங்களில் சுருக்கெழுத்துப் பயிற்சிநிலையங்களை அமைத்த இக்கழகம், தட்டச்சுப் பயிற்சி நிலையங்களையும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. பொதுமக்களும், பொதுசன சேவை நிறுவனங்களும் இவ் விஷயத்தில் தம்மாலான சேவைகளைச் செய்ய முன்வர வேண்டும்."

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க முகவர் திரு. ஈ. ஐயாத்துரை அல்வாய் தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் மேற்படி கழகத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தட்டச்சுப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினர்.

இவ்வைபவத்தில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகப் பிரதம அமைப்பாளர் திரு. க. வ. சிவச்சந்திர தேவன் தலைமை வகித்தார்.

அவர் தனது உரையில், 'இக்கழகம் வடமராட்சி மக்களுக்காக மட்டுமல்லாமல், யாழ். மாவட்டரீதியிலே சேவையை நடாத்த அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முதற் கட்டமாக மல்லாகம் இளைஞர் கழகத்துடன் இணைந்து 50 பேருக்குத் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சிகளை நடாத்திவருகிறது. இம்முயற்சிகளின் முன்னேற்றத்திற்கு கழகத்தின்மீது இளைஞர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையே முக்கியமானதாகும். என்றூர்.

## வருடாந்த மஹோற்சவம்

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 9 வரை நடைபெறும். தேர்த் திருவிழா 7-ந் திகதியும், தீர்த்தத் திருவிழா 8-ந் திகதியும் வைரவ சுவாமி பூசை 9-ந் திகதியும் நடைபெறும்.

தொலைதொடர்பு இலாகா

# இளைப்பாறிய ஊழியர் நலன்புரிக் கழகம் உதயம்

அஞ்சல் தொலைதொடர்பு சேவையில் கடமை புரிந்து இளைப்பாறிய ஊழியர்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு நலன்புரிக்கழகம் ஒன்று அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்களின் ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட அலுவல்களை கவனித்தல்மரண சகாயநிதி, இடுக்கண்நிவாரண கடன் வழங்கல், தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு வேண்டிய ஆலோசனை ஒத்துழைப்பு போன்றவற்றை வழங்குதல் போன்ற பல விவகாரங்களையும் இச்சங்கம்கவனிக்கும்.

இப்புதிய சங்கத்திற்கான நிர்வாகிகள் தெரிவு நடைபெற்ற போது தலைவராக முன்னள் வடமாகாண அஞ்சல் அலுவலக பணிப்பாளரும் இளைப்பாறியஅஞ்சல்அலுவலகபணிப்பாளருமாகிய திரு. ஏ. சி. கந்தசாமி தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. இ. சுப்பிரமணியமும், தனதிகாரியாக திரு. இ. எஸ். தியாகராசாவும் தெரிவாகினர். பதினேழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

சங்கம் தனது முதற் பணியாக இளைப்பாற்று ஒய்வூதிய கொடுப்பனவுகளில் உள்ள பாரிய ஏற்றத் தாழ்வுகளை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது இக்கோரிக்கை பற்றி திறைசேரி தற்போது ஆராய்ந்து வருகின்றது.

## சிரமதானம்

(நல்லூர்)

"யூனிசெப்" நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாண மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அரியாலை மேற்குப் பகுதிக்கான குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான குழாய்கள் புதைக்கும் வேலைகளை அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய நிர்வாகிகளும், கிராம மக்களும் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் மேற்கொண்டிருக்கிறூர்கள்.

ஆவணி மாத முற்பகுதியில் இப்பகுதிக்கான நீர் விநியோகம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரவும் பகலும் இப்பகுதி மக்கள் சிரமதான வேலையை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பெயர்:- கணபதிப்பிள்ளை ரவீந்திரன், இடம்:- கரவெட்டி, சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்துக்கும் பஸ் ஸ்ரான்ட்டுக்குமிடையில் எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பாள் பார்மசியில் ஒப்படைக்கவும்.
R/24604

### திட்டப்பரிசு பெறுபவர்

அங்கததுவ நண்பர்களினுல் தெரிவு செய்யப்பெற்று இம் மாதத்துக்குரிய ரூபாய் ஓராயிரம் பரிசுக்குரியவர் இ. நவரெத்தினம் உரும்பராய் கிழக்கு, இத் திட்டம் எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருவாய்கள், ருதுவானுலும்–திருமணமானுலும்–பிரசவமானுலும் விபத்தானுலும் - அத்தியகாலமானுலும் கடன் வசதிகளும் நன்கொடைகளும் நிறைந்த திட்டமிது. சேராதவர்கள் சேரலாம்—மேலும் விபரங்களுக்கு; லக்கிபெனிபிட் கோ லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய்.
R/24606

### ரோனியோ

தரமான ரோனியோ தட்டெழுத்து அச்சுவேலைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
B/1423


விற்பனையாகின்றது

## விரைவு மீட்டற் பயிற்சி கணிதம் I, II.

G. C. E. (சாதாரணதரம்) 11 ஆம் ஆண்டு வகுப்புக்குரியது.

இதில்: எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம் திரிகோண கணிதம், புதிய கணிதம் பயிலுவதற்கு இலகுவான வழிகாட்டிகள் அடங்கியுள்ளன.

அத்துடன்: முக்கிய தரவுகள், பலவினப் பயிற்சிகள்.

10 மாதிரி வினைப்பத்திரங்கள் கணிதம் I
10 மாதிரி வினைப்பத்திரங்கள் கணிதம் II

இவற்றுக்கு விடைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

விலை ரூபா: 12-25

ஆக்கியோன்: வி. செல்வரத்தினம்
(Inter E. E. (City & Guilds) Lond.

வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம். R/24605



## பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர்: ஆண் கூலியாட்களுக்கு உடனடி வேலைவாய்ப்புண்டு.

டுபாய்: ஆண் கூலியாட்கள்.

சவூதி: 25 வயதுக்கு மேற்பட்ட கூலியாட்களுக்கு OPEN VISA உடனடிப் பயண ஒழுங்கும் ;21 வயதுக்கு மேற்பட்டவர்கட்கு 2 வாரத்துக்குள் பயண ஒழுங்கும் செய்து கொடுக்கப்படும்.

டென்மார்க், கனடா செல்பவர்கட்கும் உடன் பயண ஒழுங்கு செய்யப்படும்.

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு வீட்டுப் பணிப்பெண்கள் வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

பாஸ்போர்ட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகிய வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

T. துரைசிங்கம்

(மகளிர் கல்லூரிக்கு அருகாமை)
ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம் உடுவில்,
சுன்னுகம்.

R/24096


## பிறந்தநாள் வாழ்த்து

✱ கைதடி தெற்கு, இராஜேந்திரம் சரோ தம்பதியின் மகள் யாழினி இன்று இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

✱ நல்லூர் யமுனு வீதி, தம்பிராஜா- மனோராணி தம்பதியின் மகள் சுரேஜா இன்று ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

✱ முல்லைத்தீவு கோயிற்குடியிருப்பு இரத்தினராசா- செல்வராணி தம்பதியின் மகள் அனுஷா (விஜி) ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

✱ சங்குவேலி வடக்கு மகேந்திரதாஸன் பவானி தம்பதியின் மகன் குகதாசன் ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

✱ கைதடி மத்தி கணேசன் மகேஸ்வரி தம்பதியின் மகள் தர்சினி ஒன்பதாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறூர்.

✱ புலோலி மேற்கு, தேவராசா தம்பதியின் மகள் வெஸ்லி தேவசுதர் இன்று ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

✱ யாழ். கச்சேரியடி, ஜீவரட்ணம் அன்னகுமாரி தம்பதியின் மகள் சிவகுமாரி பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறூர்.

✱ வண்ணை செந்தில் கதிர்வேலாயுத கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ நாரா்யணக் குருக்கள் கல்பனு கௌரி தம்பதியின் மகன் கிருஷ்ணராஜ் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறூர்.


## கிறீன்பீல்ட் ட்றவல் ஒப்பறேட்டர்ஸ்

## Greenfield Travel Operators

வெளியூர் தொலைபேசிச் சேவை

எங்கள் அனேக வாடிக்கையாளர்களின் வசதிக்காக மீண்டும் வெளியூர் தொலைபேசிச் சேவையை ஆரம்பித்துள்ளோம். நியாயமான கட்டணத்தில் உங்கள் உடனடி வெளியூர் தொடர்புக்கு எங்களை நாடுங்கள்.

இல. 26, நவீன சந்தை,
(மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23875.

உரிமையாளர்
கிறீன்பீல்ட் ட்றவல்
ஒப்பறேட்டர்ஸ்.

R/24607



வெளி நாட்டுக்கு

## பிரயாண ஒழுங்கு

என்னிடம் வெளிநாடு செல்ல பாஸ்போட் கொடுத்தவர்கள் உடன் எனது முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

5, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

அ. மகேந்திரன்

R/24603



அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் ஆரம்பிக்கும்

## வெளிவாரி பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1987/88

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் மாதம் 7ம் திகதி (7.9.86) ஆரம்பமாகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகஸ்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B. A) வர்த்தகமாணி (B. Com)

விஞ்ஞானமாணி (B. Sc) [கணிதம்] சட்டமாணி (LL. B)

விண்ணப்பங்கள் ஓகஸ்ட், 30ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்" என்ற பெயருக்கு ரூபா 10ற்கான காசுக்கட்டளையுடன் 9"X4" அளவுடைய சுயமுகவரியிட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

பதிவாளர்,
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

101/10, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

R/24060

**இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு எவ்வகையானது? அமெரிக்கா இலங்கையில் தனது காலை ஊன்ற எவ்வாறு முயற்சிக்கின்றது; இந்தியாவின் பின்னணியில் சோவியத் ரஷ்யா எவ்வாறு செயற்பட விரும்புகின்றது போன்ற பல விபரங்களை இந்தக் கட்டுரை சற்று ஆழமாகத் தருகின்றது.**

# இந்திய ராணுவத்தை சோவியத் ஆதரித்து நிற்கிறது; இரண்டுக்கும் இடையே ஒப்பந்தமும் உண்டு

**மாணவர் இளைஞர் பொதுமன்றம் (GUYS) நடத்திய ஈழ விடுதலை வாரம் சென்னை உலகப் பல்கலைக்கழக சேவை நிலையத்தில் கடந்த மாதம் 28 முதல் இம் மாதம் 4-ம் திகதி வரை நடைபெற்றது. இங்கு, "அகில இந்திய புரட்சிகர மாணவர் சம்மேளனத்தின்" அங்கத்துவ அமைப்புகளான தமிழ் நாடு புரட்சிகர மாணவர் மன்றம், கர்நாடக மாணவர் மன்றம் (பி. வி. கே.) ஆகியன இணைந்து சமர்ப்பித்த கட்டுரையின் தமிழாக்கம்.**

இந்திய உப கண்டம் அனேக தேசங்களைக் கொண்டு அமைந்தது. பெரும் பிரபுக்களையும் நிலச்சுவாந்தர் வகுப்புகளையும் பிரதிபலிப்பதே இந்திய ஆளும் வர்க்கம். 'தேசிய ஒருமைப்பாடு' எனும் பெயரில் இவ்வர்க்கம் இந்தத் தேசங்கள் எல்லாவற்றையும் அடக்கியொடுக்கிக் கொண்டு இருக்கிறது. எவ்வளவோ காலத்திற்கு முன்பே இந்தியத் தேசிய மொழியாக அது பிரகடனம் செய்துவிட்டது. இந்தியாவினது அந்த ஆளும் வர்க்கம், இலங்கையின் தீவிர இனவாதிகளைவிட அடக்குமுறைப் பிரயோகத்தில் எவ்வகையிலும் குறைந்ததல்ல.

கடந்த நாற்பது ஆண்டுகளாக, இந்தியாவின் வடகிழக்கு அரசுகள் அல்லது மாநிலங்களின் கண்ணுள்ள பல தேசிய இனங்கள் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றன. இவற்றை எதிர்கொள்ள, இந்திய மத்திய அரசானது கடூரமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டும், இப் போராட்டங்களுக்கு எதிராகச் செயற்படுமாறு நேரடியாக இந்திய இராணுவத்தை ஏவி விட்டும், அதே சமயம் சமாதான 'பேச்சுக்களை' நடத்தியும் வந்துள்ளது. 'பஞ்சாப் அஸ்ஸாம் மாநிலங்களில் அண்மையில் நேர்ந்த நிகழ்வுகள், மத்திய அரசின் இந் நடவடிக்கை உபாயத்திற்கு இன்னும் சில உதாரணங்களாகும்.

இவை மட்டுமல்ல. குடியியல் சுதந்திரங்களை வென்றெடுத்தற்கானவை உட்பட, ஏனைய பிற புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களுக்கும் இதே கதிதான் சம்பவித்தது. அவற்றை எதிர்கொள்ளப் பிரயோகிக்கப்படுவது கடூரமான அடக்குமுறையே; எத்தனையோ சந்தர்ப்பங்களில் பெருந்தொகையானோர் ஒரேயடியாகக் கொல்லப்படுகின்றனர். 'மோதல்கள்' என்ற பெயரில் தீவிரவாதிகளான தனிநபர்கள் கொலைசெய்யவும் படுகின்றனர்.

கிராமப் புறத்தவர்களின் இயக்கங்கள் தெலங்கானா, ஆந்திரப் பிரதேஷின் அனேக பிற மாவட்டங்கள், தமிழ் நாடு மாநிலத்தின் கண்ணுள்ள தர்மபுரி, பீஹார் மாநிலத்தின் ஏழ்மைமிக்க பல மாவட்டங்கள் முதலாயவற்றிலெல்லாம் மிருகத்தனமாக அடிக்கப்பட்டன. ஆர்வாலில் முப்பது கிராமப்புற மக்கள் அண்மையில் கொன்றொழிக்கப்பட்டமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். வங்காள தேசத்து 'ஏ. பி டி. ஆர்' தோழர்கள் இன்று எம் மத்தியில் இங்கு சமுகமாகியுள்ளனர். இந்த எடுத்துக்காட்டு விபரங்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்கங்கள் கையாளும் அடக்கு முறைகள் இங்ஙனமாக, அண்மையிற் கடந்த சில காலமாக ஆளும் வகுப்புக்களானவை. மக்களின் போராட்டத்தைநசுக்குவதற்கானதமது செயலுபாயங்களை மாற்றியுள்ளன. அனேக இத்தகைய மாற்றங்களை எடுத்துக்காட்டலாம். ஆயினும், அவற்றுள் முக்கியமானவை சில வருமாறு:

அஸ்ஸாம் மாநிலக் கிளர்ச்சியின்போது சில இனவாத சக்திகளும் ஆளும் கட்சியுடன் சேர்ந்துகொண்டன. சமுதாயத்தின் ஒரு பிரிவினரை இன்னொருபிரிவுக்கு எதிராக அவை தூண்டிவிட்டன. இம் முதற்பிரிவினரின் பிரச்சினைகள் யாவற்றுக்கும் பின்னைய பிரிவுதான் காரணம் என, போலி வாதப் பிரசாரம் செய்யப்பட்டது. அதன் விளைவு தவிர்க்கவொண்ணா வகையாக, ஒரு தொகையானோரின் கோரக் கொலையில் போய் முடிந்தது. ஒரு முழுத் தலைமுறையினரே காட்டுமிராண்டித் தனமாக கோரக்கொலைக்குஆளாயினர்.

இந்த 'டெல்லிப்படுகொலைகள்' கொடும் பிரசித்தம் பெற்றன.

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலையை உடனடுத்து, டெல்லி வாழ் சீக்கியர்கள் வரிசைக் கிரமமாக கொன்று நாசமாக்கப்பட்டனர். தீவைப்பு, கலவரங்கள் ஆகிய சட்டவிரோதச் சம்பவங்கள் சர்வசாதாரணமாயின. நாலு நாளாக இந்நிலைமை தணியாது தொடர்ந்தது. மூவாயிரம் சீக்கியர்வரை உயிர் இழந்தார்கள். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு வாய்ந்த இந்திய அரசின் பல்வேறு உறுப்புகள் பதிலாக, இந்துக்கள் மத்தியில் இனவாத சக்திகளுக்கு மேலும் தூபமிட்டு, காடையர்களுக்கு, விசேடமாக காங்கிரஸ் (ஐ) குண்டர்களுக்கு, தீச்செயல் புரியத் துணைநின்றன.

பிறநாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கு ஆதரவான பிரபுக்கள் வர்க்கம், பெரும் நிலச்சுவாந்தார்கள் ஆகியோரின் பிரதிநிதிகளாகிய நம் இந்திய மத்திய அரசு போலும் ஓர் அரசானது, (இலங்கை எனும்) ஒரு வெளிநாட்டில் ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் நடத்திவரும் விடுதலைப் போராட்டத்தில் அதற்கு உதவும் எனக் கற்பனை பண்ணலாமா? பண்ணலாகாது! அப்படியான கற்பனை வெறும் அசட்டுத்தனமானதும் பெரும் ஆபத்தானதும்கூட. அத்தகைய பிரச்சினையில் அது அப்படித்தான் தலையிட்டாலும், அது நோக்கம் நாடு விசாலிப்பதாக இருக்கும்; அல்லது (இரண்டு பெரும் வல்லரசுகளாகிய) அதன் எசமானர்களுக்குச் சேவையாற்றுவதற்காகவிருக்கும்.

இப்பிரச்சினையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பங்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெளிவாகத் தெரிகின்றமையால் அதனை விவரித்து உரைக்கவேண்டியதில்லை. ஆனால் சோவியத்சோஷலிச ஏகாதிபத்தியத்தினது பங்கு மறைமுகமானது; நேரடிக் காட்சிக்கு அகப்படாத வண்ணம் புறத்தோற்றம் கொண்டது எனவே அதன் பாத்திரம் இன்னமும் பகிரங்கமாக வெளிவரவில்லை.

இப்படியாக நாம் மனந்திறந்து கூறுவது இங்குள்ள எமது சில தோழர்களுடைய மனதைப் புண்படுத்தலாம். இன்னமுமா ஒரு சோஷலிச நாடாகவே சோவியத் ஒன்றியம் இருக்கிறது என்ற மாயைப் பிரமையின் பிடியிலேயே எமதுஅத்தோழர்கள் இன்னமும் இருக்கிறார்கள். ஆயினும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஒரு பகுதியினராக நாம் உள்ளோம். அவ்வகையில் எமக்கு வாய்ந்த தவிர்க்கவொண்ணாத கடமையொன்று உண்டு. சோஷலிச ஏகாதிபத்தியத்தின் தந்திரவலைக்குள்சிக்கிஅதற்கு இரையாகாதிருக்கும்படி, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களை எச்சரிப்பதும், அந்நிலையினின்றும் அவர்களை மீட்பதுமே எமது அக்கடமையாகும்.

தேசிய விடுதலை இயக்கங்களின் 'ஞானத்தந்தை' சோவியத் ஒன்றியம் அடிப்படைச் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்படுதலினின்றும் விடுதலை பெறப் போராடும் மக்களின் 'ஆபத்பாந்தவர்' பாகம் ஏற்று இதுவரை காலமும் நடித்து வருவது, சோவியத் ஒன்றியம். போராடும் மக்கள் 'சார்பில்' அனேக 'மீட்பு நடவடிக்கைகளில்' தன்னை அவ்வொன்றியம் முழுமையாக அர்ப்பணித்துள்ளது. அதற்குச் சில உதாரணங்கள் இதோ:

சோவியத் ஒன்றியம் தன்னை ஒரு 'சோஷலிச அரசாக' தற்காத்துக்கொள்ள விரும்புகிறது. அதன் பொருட்டு, அது தன்னைச் சூழ முன்னரண்களாகப் பிற அரசுகளை ('பஃவ்வர் ஸ்ரேற்ஸ்') வைத்திருக்க விரும்புகிறது அப்பேர்ப்பட்ட ஒரு நடவடிக்கையாக சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தான் நாட்டினுள் படையெடுத்தது. ஆனால், அது உலகிற்குக் காட்டிய காரணம் ஆப்கான் மக்கள் தமது புரட்சிக்கு சோவியத் உதவிகோரி நின்றனர். அத்துடன், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வவ்வுதற் பிடியினின்று தப்பித்துக்கொள்ளவும் ஆப்கான் மக்கள் பெரிதும் விரும்பினர். எனவேதான் சோவியத் ஒன்றியமாகிய நாம் அந்நாட்டினுள் படையுடன் புகுந்தோம். அவ்வொன்றியம் முன்வைக்கும் 'சாக்குப்போக்கு' இதுதான்.

சுத்த மார்க்ஸிஸவாதிகள் சுத்த லெனினிஸ்ட்டுகள் எவராக இருப்பினும் லெனின் கூறிப்போன வார்த்தைகளை முற்றுமுழுமையாக இங்கு ஏற்றுக் கொள்வர். உலகின் ஏனைய பாகங்களில் நிகழும் புரட்சிகள் தொடர்பில் அத்தகைய விடயங்களையிட்டு அவர் தமது கருத்தை எமக்கென விட்டுச் சென்றுள்ளார். ஆனால் எமது பெரும் 'மார்க்ஸிஸ – லெனினிஸ்ட்டுகள்' எனிலோ புரட்சியைக்கூட ஓர் ஏற்றுமதிச் சரக்கு ஆக்கினர். அதனாலேயே ஆப்கானிஸ்தானை விடுதலை செய்தற்காக, தமது ஆயுதப் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பினர். ஏகாதிபத்தியத்தின் வவ்வும் பிடிகளிலிருந்து ஆப்கான் தேசத்தை விடுவிப்பதுதான் இப்படையெடுப்பின் நோக்கம். போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, கியூபா ஆகியவற்றின் நிலைமைகளும் இவற்றுக்கு பங்களிப்பனவாகவே உள்ளன அவையும் கருத்தில் இடம்பெற வேண்டியனவே.

இங்கும், மீண்டும் ஒருமுறை, இந்தியாவில் சோவியத் ஒன்றியத்தின் பங்களிப்பையிட்டு வெட்டவெளிச்சமாகச் சில கூறிவைக்க விரும்புகிறோம். 'தனியார் துறை' என்பதிலிருந்து வேறுபட்டது எனும் விதத்தில் 'பொதுத் துறை' அல்லது 'அரசாங்கத் துறை'யில் சோவியத் பங்கு அதிமுக்கியமானது. இங்கு வருகை தந்திருக்கும் பேராளர்களுக்கு அது தெளிவாகியிருத்தல் வேண்டும். பொதுத் துறை அறவே பொருத்தமற்ற, பொல்லாத ஒரு பெயர் இது. இத்துறையின்கண் உள்ள (கம்பனிகள்) பொறுப்பேற்பு முயற்சிகள் எல்லாமே, அல்லது பெரும்பாலும் எல்லாமே, ரஷ்ய 'உதவி'யுடன் இந்திய அரசினால் நடத்தப்படுவன ஆகும். இப் பொதுத்துறைக் கைத்தொழில்கள் பூதாகாரப் பருமனானவை. மூலத்துறை எனப்படும் அடிப்படை மூலப் பொருட்கள் உற்பத்தித் துறை முதலாயினவற்றில் அவைகள் அத்தகைய பிரமாண்டமானவை. ஆகவே, அந்த 'உதவி' இந்திய பொருளாதார வளர்ச்சி அல்லது அபிவிருத்தியின் விதியை நிர்ணயிக்கிறது. இங்ஙனமாக, பாரத நட்டுப் பொதுத் துறையின் பூரண கட்டுப்பாட்டுக் கடிவாளம் சோவியத் ஒன்றியத்தினுடைய கைகளில் இருக்கிறது.

இவ்வொன்றியம் காலத்துக்குக் காலம், பல வீரதீர சாகஸத் துணிகரங்களில் ஈடுபடும். இத்துணிவான செயல்களில் எலலாம் இந்திய ஆதரவு தனக்குக் கட்டாயம் கிட்டும் வகையில் சோவியத் ரஷ்யா மேற்படி கடிவாளத்தைக் கையாளுகிறது. அதுமட்டுமல்ல, தயவு தாட்சண்யமற்ற ரஷ்ய பொருளாதாரச் சுரண்டலுக்கு பாரதம் அமைந்து செயலாற்ற வேண்டியும் நேர்ந்துள்ளது. இவ்வகையில், சோவியத் ஒன்றியத்தின் பலவந்தத்தின் பேரில் இந்தியா தனது ரூபா நாணயத்தை மதிப்புக் குறைக்க வேண்டி ஏற்பட்டது.

சோவியத் ரஷ்யாவின் 'உதவி'யும் அதனோடு தானியங்களும் கிடைக்க, இந்தியா விலைமதிப்பற்ற மூலப்பொருட்களை சோவியத் நாட்டிற்கு வழங்கிப் பரிமாற்றம் செய்தது இத்தகைய, இருசாராருக்கும் சமவாய்ப்புக் கிடையாத, வர்த்தக ஒப்பந்தங்களை இரு நாடுகளும் கைச்சாத்திட்டுக் கொண்டன.

அநேக தடவைகள் இந்திய ஆளும் கட்சிக்கு சோவியத் ஒன்றியம் ஆதரவு அளித்திருக்கிறது. 'இந்திரா காங்கிரஸ்' அரசியல் கட்சியே இங்கு ஆளும் கட்சி எனப்பட்டது. பூரண சோவியத் சார்புடைய கொம்யூனிஸ்ற் கட்சிகள் இந்தியாவில உள்ளன. அவற்றின் சிபார்சுகளுக்கு முழுமாறாகக் கூட ரஷ்யா இவ்வாறு ஆதரவளித்துள்ளது.

சுதந்திரம் அடையுமுன்னர் இந்தியா 'காலனித்துவ நாடாகப் பல நூற்றாண்டுகளாக உழன்றது. சுதந்திர இந்தியாவின் வரலாறு முழுவதிலும் 'இருண்ட யுகம்' எனக் கொள்ளப்படத்தக்கது 'அவசரகாலச் சட்டம்' பிரகடனமாகி அமுலில் இருந்த காலம் ஆகும். அவ்வேளை இந்தியாவின் பிரதமராக இருந்தவர் திருமதி இந்திரா காந்தி ஆவர். அகில பாரத 'கம்யூனிஸ்ட்' கட்சிகள் இரண்டு உண்டு. ('சி. பி. ஐ.') சோவியத் ஒன்றியச் சார்பான 'கொமியூனிஸ்ற்பார்ட்டி ஒஃவ் இந்தியா'வும், 'சி. பி. ஐ. (எம்.)' 'கொமியூனிஸ்ற் பார்ட்டி ஒஃவ் இந்தியா (மார்க்ஸிஸ்ற்)' ஆகிய இரண்டுமே அவையாகும். எல்லா முக்கிய விடயங்கள் தொடர்பிலும் இவை இரண்டும் இந்திய அரசாளும் வர்க்க சார்பாகவே நிற்கும். தேசிய இனங்களுக்குரிய சுய நிர்ணய உரிமையும் இவ்விடயங்களுள் அடங்கும்.

இவை அனைத்தையும்விட மோசமானது, நேரடி இராணுவத் துணை. சோவியத் ஒன்றிய அரசு, இந்திய இராணுவத்தை ஆதரித்து நிற்கிறது. இந்திய–சோவியத் இராணுவ ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்தாகியுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தகும். இதே அரசின் இராணுவந்தான் தனது சொந்தக்

—5ம் பக்கம் பார்க்க

# பாலசிவ மகாராஜின் 32-வது பிறந்த நாள்

ஈஸ்வர வரப்பிரசாத் என்ற சிறு பையனை அவனது பெற்றோர் ஆரம்ப பள்ளியில் சேர்த்தனர். ஆசிரியர்களும் குழந்தையின் மதி நுட்பத்தை கவனித்தார்கள். அரும் பெரும் சாதனைகள் செய்யப் பிறந்திருக்கும் இப் பையனை உலகம் வெகு விரைவிலேயே தீர்க்கதரிசியாக ஏற்றுக் கொள்ளும் என்றார்கள். ஒருநாள் சிறுவர்கள் சில ரோடு படிப்பில் ஈடுபட்டிருந்த சமயம் எண்ணெய் இல்லாமல்



விளக்கு மங்கலாயிற்று வரப்பிரசாத் உடனே விளக்கில் தண்ணீரை ஊற்றி வைத்தார். அதிசயிக்கத்தக்க வகையில் விளக்கு விடியும் வரை எரிந்தது.

இவர் தனது எட்டாம் வகுப்பில் இருந்த போது பாட்டியின் அறிவுரைப்படி பறக்கும் கருடனைப் பார்த்தால் "கிருஷ்ணா கிருஷ்ணா" என்று சொல்லும் வழக்கம் இருந்தது. இதைப் பார்க்கும் பையன்களுக்கு வேடிக்கையாக இருக்கும். இறந்த கருடன் ஒன்று கிடைக்கவே வேடிக்கைபார்க்க விரும்பினார்கள். கல்லொன்றின் மேல் கருடனை வைத்துவிட்டு வரப்பிரசாத்தை அழைத்தனர். இறந்த கருடனைப் பார்த்து கவலை கொண்டு "கிருஷ்ணா கிருஷ்ணா" என்று சொன்னதும் கருடன் எழும்பிப் பறந்து விட்டது. கேலி செய்ய நின்றவர்கள் வெட்கித் தலை குனிந்தனர்.

என்னதான் இருந்தாலும் இளமைத்துடியாட்டம் வரப்பிரசாத்தையும் விட்டதில்லை. கல்லூரி நாட்களில் மாணவர் இயக்கத்தலைவராக இருந்தார். பொது உடைமைத் தத்துவம் தலைக்கேறியிருந்தது. விஞ்ஞானப் பட்டப்படிப்பிற்கு இடம் தேடிய காலம்; இடமோ கிடைப்பதாக இல்லை. கல்லூரிக்கு செல்லும் வழியில் சீரடி சாயி பாபா கோயில் ஒன்று இருந்தது. விஞ்ஞானப் படிப்புக் கல்லூரிக்கு அனுமதி கிடைக்க வேண்டுதல் செய்ய நினைத்த வரப்பிரசாத் கணக்குப் போட்டுக் கொண்டார். ஒரு பாதி தேங்காய் செலவு செய்து கல்லூரியில் இடம் பெறுவதென்றால் பொதுவுடைமைத் தத்துவப்படி பிழையில்லை. கல்லூரியில் இடம் வேண்டும். அதுவும் பதினொரு நாட்களில் கிடைத்தால் ஒரு தேங்காய் உடைத்து சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதாக வேண்டிக் கொண்டார். குறும்புப் புத்தி போகவில்லை. தினமும் அக் கோயில் முன் நின்று கைவிரல்களை எண்ணி மடித்துக் காட்டுவார். கிழவா ஒரு நாள் முடிந்தது எனக்கு இடம் கிடைக்கவில்லை. உனக்குத் தேங்காய் கிடைக்கப் போவதில்லை. சகஸ்ரநாம அர்ச்சனையும் இல்லை என்பார். ஏழாம் நாள் அற்புதம்நடந்தது. இடம் கிடைத்திருப்பதாக கல்லூரியில் இருந்து கடிதம் வந்திருந்தது. இதன்பின் சீரடி சாயி பாபா மீது அன்பு பாராட்டத் தொடங்கினார். இக் கால கட்டத்திலே வரப்பிரசாத்தின் அற்புத மகிமைகள் அதிகரிக்கத் தொடங்கின. விபூதி, குங்குமம், உருத்திராக்கம், விக்கிரகங்கள் முதலியவற்றை தமது கை அசைவினால் வரவழைத்துக் கொடுப்பதுவும், கண்களில் இருந்து கனல் எழுப்பி நெருப்பை உண்டாக்குவதும் பெய்து கொண்டிருக்கும் மழையை வானத்தைப் பார்த்து நிற்பாட்டுவதும் ஒரே நேரத்தில் பல இடங்களில் காட்சி கொடுப்பதுவும் நோயினால் துன்பப்படுபவர்களை குணப்படுத்துவதுமாக இருக்கையில் மக்கள் கூட்டம் இவருக்கு ஸ்ரீ பால சிவ யோகீந்திர மகாராஜ் என்று பெயர் வைத்து அழைக்கத் தொடங்கினார்கள்.

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த சுவாமிகள் சமாதானமே வாழ்வின் இலட்சியம் எனக் கொண்டு ஸ்ரீ பாலசிவ சர்வதேச சமாதான ஸ்தாபனத்தை நிறுவினார். இதன் கிளைகள் இன்று பல நாடுகளில் இயங்கி வருகின்றது. இக்கிளைகளின் செயலாளர்களை சுவாமிகளே நியமனம் செய்கின்றார். இத்தகைய கிளையொன்று யாழ்ப்பாணத்திலும் நிறுவப்பட்டு அதற்கு வேலணையைச் சேர்ந்த திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம் அவர்கள் செயலாளராக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார். சுவாமிகளது முப்பத்து இரண்டாவது பிறந்தநாள் விழா இன்று இருபத்தேழாந் திகதி ஸ்ரீ பாலசிவ சர்வதேச சமாதான நிறுவனத்தைச் சார்ந்த பக்தர்களால் கொண்டாடப்படவுள்ளது. கொழும்பில் நடைபெற்ற உலக இந்துமகாநாட்டிற்கும் சுவாமிகள் வருகை தந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கே. வி.கே.ஜெயச்சந்திரன்

## நிதியுதவி

(நல்லூர்)

மண்டைதீவில் அரக்கத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட 34 கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் ஐயாயிரம் ரூபாவை உடன் வழங்குவதென்று யாழ்ப்பாண ஐக்கிய கிறிஸ்தவ சங்கம் முடிவு செய்துள்ளது.

யாழ். வை, எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண ஐக்கிய கிறிஸ்தவ சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. ஜே ஜி அரசரத்தினம் தலைமை வகித்தார்.

### தொழிலதிபர் கனகராஜா பேச்சு:

# வியட்நாம் மக்கள் யுத்த காலத்திலும் கூட விவசாயத்தைக் கைவிடவில்லை!

(சங்கானை)

தமிழ் விவசாய குடும்பங்கள் இன்றையநாட்டின்சூழ்நிலையில் பல்வேறு இன்னல்களை அநுபவிப்பதுடன் வாழ்வா சாவா என்ற அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை உணரக் கூடியதாக இருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் ஏறக்குறைய பதினையாயிரம் விவசாய குடும்பங்கள் அகதிகள் நிலையில் பட்டினியால் தவிக்கின்றமையை அவதானிக்க முடிகிறது. இப்படியாக கிளிநொச்சி மாவட்டம் பலத்த வேதனையுடன் பசுமைப் புரட்சியை கைவிடும் நிலையை தாண்டிய நிலையில் பலத்த கஷ்டங்கள் விவசாயிகளை சூழ்ந்தநிலையில், உற்பத்தி பெருக்கம் நடைபெறுகின்றன.

இவ்வாறு யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு க. பரமலிங்கம் சங்கானை பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்

மறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு, பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கு நிகழ்ச்சிகளை யாழ். அபிவிருத்திச் சபை மின்சார அத்தியட்சகர் திரு பொ. ஜெயரட்ணசிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

சங்கானை கிழக்கு பிரிவு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு, ஜீ. சிதம்பரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொழிலதிபர் திரு க கனகராஜா மரக்கன்றுகளையும், இப்பில் இப்பில், கீரை விதைகளையும் வழங்கி ஆசியுரை நிகழ்த்துகையில்: மண்கூடாது என்ற சாட்டுகளை கூறி பூமித் தாயின் கருணைப் பெறுபேறுகளை சோம்பேறி நிலையில் முயற்சி இல்லாத நிலையில் நாம் பூரணமாக பெறுவது இலலை என கவலை தெரிவித்தார். வியட்நாம் மக்கள் யுத்த நேரத்தில் உழுகின்ற நிலையில்கூட குண்டுகள் விழும் கட்டத்திலும் உணவு உற்பத்திகளில் அயராது முயற்சியுடன் கஷ்டப்பட்டு பட்டினியை போக்குவதற்கு உழைத்தமை பற்றிய வரலாறுகளை நாம் அனைவரும் இன்றைய சூழ்நிலைகளில் படித்து உணர்ந்து செயல்படவேண்டும் என்றும் கூறினார். விவசாயிகள் குழு பொதுச் செயலாளர் திரு க வீரசிங்கம் பல தரபபட்ட விதைகள் இலவசமாக வழங்கினார்.

யாழ் விவசாய இலாகா உதவிப்பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை சங்கானை கிழக்கு விவசாயிகள் குழுத் தலைவர் பேராசிரியர். கா. சதாசிவம்பிள்ளை விவசாய இலாகா நிர்வாக உத்தியோகத்தர்கள் திரு. குமாரவேல், திரு. கதிரைமலை, பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பி. சூசைப்பிள்ளை, விவசாய போதனாசிரியர் திரு. ச. தம்பிராஜா, விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன், மின் அத்தியட்சகர் திரு. ஜெயரட்ணசிங்கம், நூலகர் திரு செ. யோ. செல்வராஜா, உட்பட பலர் உரையாற்றினார்கள். சங்கானை-சிவப்பிரகாச மகா வித்தியாலய, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவிகளின் கலை நிகழச்சிகளும் நடைபெற்றன

### சுன்னாகத்தில்

# சட்டவிரோத மின்பாவனை; பலவிதமான பாதிப்புகள்

(சுன்னாகம்)

சுன்னாகம் பட்டணசபைப் பகுதியில் தினமும் மாலைவேளைகளில் ஏற்படும் மின் துண்டிப்பினால் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. இரவு 7-00 மணியிலிருந்து மின்சாரம் நின்றுவிடும் காரணத்தால் வர்த்தக ஸ்தாபனங்கள் வியாபார கருமங்களை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதுடன் அவற்றினை மூடிக் கொள்ளவும் இயலாதவர்களாகவும் இருக்கின்றனர். திறந்திருக்கும் ஒருசில வியாபார நிலையங்களும் மெழுகுதிரியின் உதவியுடனேயே இயங்குகின்றன. வீடுகளில் உள்ளவர்கள் தமது நாளாந்த அவசர பணிகளைச் செய்ய முடியாதிருப்பதோடு மாணவர்களின் கல்வியும் பாழடிக்கப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மின் பாவனையாளர்களின் தொகை வர வர அதிகரித்து வருவதால் ரான்ஸ்போமரின் பொருத்தப்பட்டுள்ள றிப் சுவிச் தானாகவே விழுவதால்தான் இத்தடை ஏற்படுவதாகக் காரணங் கூறப்படுகிறது. பிற்பகலில் வீதி ஓரங்களில் தடிகளில் வைத்துக் கட்டப்பட்ட வயர்களைத் தாங்கியவாறு மின் தொடர்பை ஏற்படுத்துவதற்கு பலர் ஆயத்த நிலையில் நிற்பது அடிக்கடி காணும் நிகழ்ச்சிகளாகிவிட்டன. சட்டவிரோத மின் தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் மாத்திரமே சுன்னாகப் பகுதி மக்கள் ஒழுங்கான மின் விநியோகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உப அலுவலக உயர் அதிகாரிகள் அண்மையில் கூட்டங்களை நடத்தி இதுபற்றி எடுத்துக் கூறியதுடன், சில பொதுஸ்தாபனங்களும் சட்டவிரோத மின்தொடர்பைத் துண்டிப்பதற்குக் காலக்கெடு விதித்திருந்தும் எதுவித பயனையும் அளிக்கவில்லை. இந் நிலை மேலும் தொடருமானால் ரான்ஸ்போமரும் பழுதடைந்து சுன்னாகம் முழுவதுமே இருளில் மூழ்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாமென அச்சந்தெரிவிக்கப் படுகிறது.

### சங்கானை கிழக்கு குழு

# விவசாயிகள் நலன் கருதி எடுத்த தீர்மானங்கள்

(சங்கானை)

சங்கானை- கிழக்குப் பிரிவு-விவசாயிகள் குழுக்கூட்டம் முன்னாள் விவசாயப் பிரதிப் பணிப்பாளர் பேராசிரியர் திரு. கா. சதாசிவம்பிள்ளை தலைமையில் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொழுது ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு;

- சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் விவசாய கல்வியை நடைமுறையில் க. பொ. த. சாதாரணம் வகுப்பு வரை கற்பிப்பதற்கு விவசாய பாடத்துக்கு ஓர் ஆசிரியரை நியமித்து மேற்படி கல்வியை தொடர வழி செய்யுமாறு கல்விஇலாகாவை வேண்டுதல்.
- மேற்படி பாடசாலையில் க. பொ. த. உயர்தரம் வகுப்பு உடன் நடைமுறையில் கொண்டு வருவதன் மூலம் பல விவசாயிகளின் குடும்பத்தின் மாணவர்கள் உயர்கல்வியை தொடரவாய்ப்பு உண்டு என்பதனை கல்வி இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கு வலியுறுத்துதல்.
- சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் "விவசாய கடன்" வழங்கும் திட்டத்தை, சில விவசாயிகள் முன்னர் பெற்ற கடனைதிரும்பசெலுத்தவிலலை என்ற காரணத்தை கூறி நடைமுறையை தொடராமையை கண்டித்து, பல விவசாயிகள் பெற்றகடனை திரும்ப செலுத்தினவர்களுக்கு உடன் "விவசாயகடன்" வழங்கிஉதவ முன்வர வேண்டும் என்றும், பொருளாதார வசதிகளுடன் இருந்த பல விவசாயிகள் தற்பொழுது கஷ்டப்படுவதனை கருத்திலகொண்டு விவசாய அறிமுக அட்டை மூலம் "விவசாய கடன்" வழங்க முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்தல்.
- மேற்படி சங்கத்தின் உர விற்பனை பகுதியில் உரம் தட்டுப்பாடு நிலவுவதனை சுட்டிக் காட்டி சேதப்பட்ட உரப் பைகளை விற்பனை செய்யக் கூடாது என்று வலியுறுத்தல். பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கடைகளுடன் லாபம் கருதி போட்டிவியாபாரத்தையும், சட்டத்தையும், ஒழுங்கையும் மட்டும் கருத்தில் கொண்டு செயல்படுகின்றமையுடன் மட்டும் நில்லாது ஒரு நோக்கு இல்லாத வகையில் பலநோக்குடன் விவசாய அபிவிருத்தி பணிகளிலும் கவனம் செலுத்தி பல உதவிகளையும் செய்வதற்கு முன்வர வேண்டும் என வலியுறுத்தல்.

மேற்படி முக்கிய பிரச்சினைகளை விவசாயப் பிரதிநிதிகளானதிருவாளர்கள்;க.இராமலிங்கம், மு. சின்னராஜா, க. வீரசிங்கம், ந.மகிழ்ராஜா, க. அருந்தவராஜா ஆகியோர் வலியுறுத்தி உரை நிகழ்த்தினார்கள். கமநல சேவைகள் திணைக்கள நடவடிக்கைகள் பற்றி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜீ. சிதம்பரநாதன் விபரித்தார்.

## ஏழாலையில் பொது நூலகம்

(சுன்னாகம்)

மாவட்ட அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து ஏழாலை உப-அலுவலகத்தினூடாக பொது நூல் நிலையம் ஒன்று ஏழாலையில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்றரை இலட்சம் ரூபா மதிப்பீட்டில் நூல் நிலையம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளருக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளன. இந்நூல் நிலையம் உப-அலுவலக காரியாலயத்திற்கு அருகாமையில் கட்டப்படவுள்ளது.

ஏழாலை முத்தமிழ் மன்றத் திறந்த வெளி அரங்கு நிர்மாணிப்பதற்கு இருபத்தையாயிரம் ரூபாவும், குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையக் கட்டடப் புனரமைப்புப் பணிக்கு இருபத்தையாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

# பஞ்சாப்பில் ஹர்த்தால்

# 150 சீக்கியர்கள் கைது

(புதுடில்லி)

**பஞ்சாப்பின் முக்தர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பதினான்கு இந்துக்கள் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பஞ்சாப் மாநிலத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

இந்திரா காங்கிரஸ், அகாலிதள், பாரதீய ஜனதா, மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியகம்யூனிஸ்ட் ஆகிய ஐந்து கட்சிகளும் கூட்டாக விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே நேற்று அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலை முன்னிட்டு பஞ்சாப் மாநிலத்தில் சகல பகுதிகளிலும் ராணுவ பொலிஸ் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமிர்தசரசில் இருபத்திநான்கு மணிநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளையில் கொலைச்சம்பவத்தில் ஈடுபட்ட சீக்கியத் தீவிரவாதிகளைத் தேடிவரும் பொலிசும், பாரா ராணுவத் துருப்புக்களும் நேற்று நண்பகல் வரையில் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட சீக்கியர்களை கைதுசெய்துள்ளனர்.

டில்லியிலும் சில பகுதிகளிலும் தீவைப்பு போன்ற வன்செயல்கள் பரவியதைத் தொடர்ந்து அங்கும் சில பகுதிகளில் நேற்று ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தில் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்காக மேலதிக ராணுவத் துருப்புக்களை பஞ்சாப்புக்கு அனுப்பிவைக்குமாறு பஞ்சாப் முதல்வர் மத்திய அரசை கேட்டுள்ளார்.

## கோரிக்கை

கன்னியாகுமரி கடலில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் காணமல்போன நான்கு மீனவர்களையும் தேடிக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்குமாறு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் மீன்வளத் துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மீசோ கிளர்ச்சியாளர்கள் 300 பேர் சரணடைந்தனர்

(புதுடில்லி)

இந்தியாவில் சர்ச்சைக்குரிய மாநிலங்களிலொன்றான மிசோராமின் கிளர்ச்சியாளர்கள் இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக தமது ஆயுதங்களுடன் சரணடையத் தொடங்கியுள்ளார்கள்

இருபது ஆண்டுகளாக நடைபெற்ற மிசோ தேசிய விடுதலை முன்னணியின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவருமுகமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் மீசோ தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் திரு. லால் தெங்காவுக்குமிடையே கடந்த மாதம் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இது வரையில் சுமார் முந்நூறு கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களுடன் சரணடைந்துள்ளார்கள். இவர்கள் பெரும்பாலும் பர்மாப் பகுதியிலுள்ள காடுகளில் மறைவாக வாழ்ந்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் எல்லைப் பகுதிகளிலுள்ள காடுகளில் மறைந்து வாழும் மேலும் சுமார் நூற்றி ஐம்பது கிளர்ச்சியாளர்கள் விரைவில் சரணடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு சரணடையும் கிளர்ச்சியாளர்களுக்குப் பல சலுகைகளை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது. இவர்களுக்கு வேலைவாய்ப்புக்களும் ரொக்கப்பணமும் இந்திய அரசால் வழங்கப்படுகிறது.

## மாக்கோஸ் கணக்கில் 23 கோடி

(மணிலா)

பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி மாக்கோஸ் அவரது மனைவி இமெல்டா மாக்கோஸ் ஆகியோர் இணைந்து வேறு பெயரில் இருபத்து மூன்று கோடி டாலரை சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்துள்ளதாக பிலிப்பைன்ஸ் சொலிசிட்டர் ஜெனரல் செட்பிறிஒடோனஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு தொகைப் பணத்தை அவர்கள் எவ்வாறு சம்பாதித்தார்கள் என்பது விந்தையாகவுள்ளது எனவும் தெரிவித்த அவர் வில்லியம் சாண்டஸ், யேன் றயன்ட்ஸ் ஆகிய பெயர்களிலேயே இவர்கள் பணத்தை வைப்புச் செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## இந்திய...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

குடிமக்களானோர் விடுதலை பெற அரசிற்கு எதிராகப் போராடப் புறப்படும் போது அவர்களைச் சின்னாபின்னமாக படுகொலை செய்கிறது. தேசிய இயக்கங்களும், நாட்டுப்புற மக்களின் புரட்சிகர இயக்கங்களும் இதே இராணுவங் கொண்டுதான் நசுக்கப்படுகின்றன. அன்றியும், பெரும் வல்லரசுகளின் 'நல்லாசி' களுடனேயே அவை நசுக்கப்பட்டும் வருகின்றன. அவ்வேளைகளில் எல்லாம் இந்திய ஆளும் வர்க்கக் கட்சிகள் யாவும அந்த அடக்கியொடுக்கும் செயல்களுக்கு ஆதரவு நல்கும். பாரம்பரிய 'இடதுசாரிக்' கட்சிகளான 'சி. பி. ஐ. சி. பி. ஐ. (எம்.)' ஆகியனவும் ஆளும் கட்சியின் பக்கமே சார்ந்து நிற்கும்.

('சி. பி. ஐ. ') இந்திய கொமியூனிஸ்ற் கட்சி சோவியத் ஒன்றியம் சார்பானது. ('சி. பி ஐ. (எம்)') இந்திய கொமியூனிஸ்ற் (மார்க்ஸிஸ) கட்சியும் அகில பாரத ரீதியாகவே செயற்படுகிறது. நாளது வரை இந்த இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் தமிழ் ஈழப் போராட்டத்திற்குக் கணிப்பு வழங்கியது கிடையாது.

இனி, இறுதியாக, இந்தச் சர்வதேச நிலைமையின்கண், இவ் விடுதலைப் போராளிகளுக்கு எஞ்சியுள்ள ஒரேஒரு விமோசன மார்க்கம் சோவியத் ஒன்றியம்தான் என அந்நாடு தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள மிக விரும்புகிறது. ஆகவே, இப்போராளிகளைத் தனது பிடிக்குள் சிக்கவைக்கும் உள் நோக்கத்துடன் அவர்களுக்குப் படைக்கலங்களும் வெடிமருந்தும் உதவி வருகிறது. ஆயினும் இதனை ஏது, விளைவு (காரண, காரிய) வாரியாக நாம் பகுத்துணர வேண்டி இருக்கிறது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஒரு மனித இனத்திற்கு இன்னுமொரு நாடு ஆயுதமும் பிற வடிவங்களில் உதவியும் வழங்குகிறது. அதனால் மட்டும் அந்நாடு முன்னேற்ற நாடாகிவிடுமா? இல்லை. அல்லது அதனைவிட அப்பால், அந்நாடு ஒரு புரட்சிகரசக்தியாகிவிடுமா? இல்லவே இல்லை. ஆகையால் தமிழர் விடுதலைப் போராளிகளின் உண்மை நண்பனாக அந்நாட்டை எவரும் கொள்ளவோ கணித்துக்கொள்ளவோகூடாது.

இங்கு நாம் எடுத்துக் கொண்டவிடயம், இலங்கை என்பது ஆகும். இவ்விடயத்தில், திருக்கோணமலை துறைமுக, விமானத் தளப் பட்டினத்து அமைந்த அமெரிக்க போர்த் தளத்தை நீங்கச் செய்து, அதன் இடத்திற்குத் தான் வரவேண்டும் என்பதே சோவியத் ஒன்றியத்தின் உட்கிடையான உத்தேசம் ஆகும். திருக்கோணமலையில் சோவியத் இராணுவத் தளமொன்று அமையும் பட்சத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'டியெகோ கார்ஸியா' தீவுகளிலுள்ள இராணுவ தளத்தின் அறைகூவலுக்கு விடைபகர திருக்கோணமலை போதுமானது ஆகிவிடும்; இந்து சமுத்திரத்தில் சோவியத் ஆதிக்கம் ஓங்க வழிபிறக்கும். உலகில் எங்கெங்கெல்லாம் சாத்தியமோ, அங்கு அங்கெல்லாம் பெரும் வல்லரசுகள் தமது ஆதிக்கத்தை, இராணுவ பலத்தை, செல்வாக்கை, மேலோங்கச் செய்ய முனைந்து வருகின்றன. இது சதா நிகழும் ஒரு போட்டாபோட்டி சோவியத் ஒன்றியமோ தன்னை ஒரு புரட்சிவா என வெளிக்காட்டிய வண்ணம் இப்போட்டியில் வெற்றியீட்ட முயன்று வருகிறது.

தமிழ் ஈழம் விடுதலை ஒழுங்கமைப்புகள் பல உள. அவற்றில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தொண்டர் 'ஏஜென்ஸி கள் அல்லது செயற்பாட்டுக் குழுக்களும் பல. இதனை நாம் அறிய வந்துள்ளோம். அவற்றுடன் எமக்குள்ள அனுபவங்கள் எப்படியானவை? அவைகளை நாம் எவ்வாறு காண்கிறோம்? இவற்றையே நாம் எடுத்துக்கூற விரும்புகிறோம்.

(நாளை தொடரும்)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அன்பளிப்பு

(அரியாலை)

தொழில் அதிபர் திரு. க. கனகராசா மயிலிட்டி மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு சவர்க்காரம், 2500 வெளி நோயாளர் பகுதிச் சிட்டைகள், 1000 அனுமதிப் பத்திரங்கள் என்பனவற்றை அன்பளிப்பாக வழங்கினார். இச் சிகிச்சை நிலைய நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு. வ. தர்மராசா இவற்றைப் பெற்றுக்கொடுப்பதில் முயற்சி எடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இடமாற்றம்

(வேலணை)

காவலூர் உதவி அரசாங்க அதிபராக கடந்த ஒன்றரை வருட காலமாக கடமையாற்றிய செல்வி சாந்தி சுப்பிரமணியம், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக இம் மாதந் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். காவலூர் உதவி அரசாங்க அதிபராக இதுவரை ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

## மகத்தான சேவை

(நெடுந்தீவு)

''பசித்தவனுக்கு உணவும் தாகமாக இருப்பவனுக்குத் தண்ணீரும் உரிய நேரத்தில் வழங்குதல் மகத்தான சேவையாகும் அவ்வாறே, யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையம் எமது மீனவக் குடும்பங்களின் துயர் போக்கத் தகுந்த நேரத்தில் உகந்த உதவியைச் செய்துள்ளது.''

இவ்வாறு நெடுந்தீவில் கடற்றடைச்சட்டத்தாற் பாதிக்கப்பட்ட 450 மீனவக் குடும்பங்களுக்கு யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையம் உணவுப் பொருட்களை வழங்கியதைப் பாராட்டி நன்றி தெரிவித்த நெடுந்தீவு கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கத் தலைவர் திரு. எஸ். அமிர்தநாதர் கூறினார்.

இவ்வுதவிகள் நெடுந்தீவு மீனவர் குடும்பங்களுக்குக் கிடைக்கப் பல வழிகளிலும் உதவிய அருட்திரு பயஸ் அடிகளார், நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு லம்பேட் அடிகளார் ஆகியோரையும் மேற்படி சங்கத் தலைவர் பாராட்டினார்.

## மெத்தையால் மெத்த மகிழ்ச்சி

(சுன்னாகம்)

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளரின் பாவனைக்கென நாற்பது துப்பு மெத்தைகள் வந்து சேர்ந்துள்ளன. அரசாங்க சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மெத்தைகள் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. நோயாளர்கள் இதுவரை காலமும் அனுபவித்து வந்த குறைபாடுகள் இதன் மூலம் நீக்கப்பட்டுள்ளதாக மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது.

## இடமாற்றச் செயற்பாடு

(சுன்னாகம்)

'சுகாதார சேவைகள் சிற்றூழியர்களின் இவ்வருடத்திற்கான இடமாற்றங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் படியாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன. இடமாற்றத்திற் குள்ளாவோரின் இடமாற்றக் கடிதங்கள் அவரவர்கள் கடமை புரியும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## பரவலாகிறது இத்தொல்லை

(வேலணை)

அல்லைப்பிட்டிக் கிராமத்திற்கு மின்சாரம் விநியோகிக்கும் மின்மாற்றி அதிக மின்பழு காரணமாக எரிந்ததன் நிமித்தம் இக்கிராமத்திற்கான மின்சாரம் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக ஸ்தம்பித நிலை அடைந்துள்ளது.

இதனால் அல்லைப்பிட்டி கிராமம் இருளில் மூழ்கியுள்ளது எரிந்துவிட்ட மின்மாற்றிக்கு பதிலாக புதியதொரு மின்மாற்றி பொருத்துவதற்கான ஏற்பாடுகளை வேலணை மின்சார சபையினர் செய்து வருகின்றார்கள். சட்டவிரோத மின்சாரத்தை நிறுத்தும்படியும், அதற்காக மின்பாவனையாளர் பாதுகாப்புச் சங்கமொன்று அண்மையில் வேலணை மின்சாரசபை அதிகாரி திரு மார்க்கண்டு விஜயகுமாரினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இச்சங்கம் சட்டவிரோத மின்சாரத்தை தடை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

## நூல்வடிவில் விளக்கவுரை

(சுழிபுரம்)

சுழிபுரம் வழக்கம்பரை சனசமூக நிலையப் பஜனைச் சபையினரின் அபிராமி அந்தாதிப் பாடல்களின் ஆய்வுரைத் தொடரின் 19-ம், 20-ம் பாடல்களின் விளக்கவுரை நூலாக வெளியாகியுள்ளது. பிரதிகளை செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மின்சாரம்: இங்கே பகலில் மட்டும்

(வேலணை)

கடந்த பதினைந்து நாட்களுக்கு மேலாக தடைப்பட்டிருந்த தீவுப் பகுதிக்கான மின்சாரம் தற்போது பகலில்மாத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

காலை ஏழு மணிக்கு வரும் மின்சாரம் மாலை ஐந்து மணியுடன் நின்றுவிடுகின்றது. தீவுப் பகுதியில் ஏற்பட்ட தடையினால் இதுவரை மின்தடை ஏற்பட்டிருந்தது. இத்தடை சீர் செய்யப்பட்ட பின்பும் மின்சாரம் இரவினில் இல்லை பொன்னாலைப் பகுதியில் உள்ள மின்மாற்றியொன்று பழுதடைந்து விட்டதனாலேயே இந்நிலை உருவாகியுள்ளதாக வேலணை மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். இரவு நேர மின்சாரமின்மையால் தீவுப்பகுதி கடந்த பதினைந்து நாட்களாக இருளில் மூழ்கியுள்ளது. இதனால் மாணவர்களின் படிப்பு, மற்றும் பல சேவைகள் தடைப்பட்டுள்ளன.

## கரவெட்டி வெற்றி

(கரவெட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் பதினைந்து வயதுக்குட்பட்டோர்க்கான நிகழ்ச்சியிலும் 17 வயதிற்கு உட்பட்டோர்க்கான நிகழ்ச்சியிலும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது.

பதினைந்து வயதிற்குட்பட்டோர்க்கான போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

ஈழமுரசு

வானத்திலிருந்து வீசப்பட்ட பிரசுரம் பற்றி

பேராசிரியர் சிவத்தம்பி அறிக்கை

## பிரயாணிகள் தங்குமடம் மரணப் பொறியாகியுள்ளது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு கடல் பிரயாணிகள் தங்கிச் செல்லவென பெருந்தெருக்கள் திணைக்களத்தினரால் குறிகாட்டுவான் இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள தங்கு மடம் இப்போது மரணப் பொறியாக மாறி விட்டது. அதிவேகப்படகில் வரும் படையினர் குறிகாட்டுவான் துறையை நோக்கித் திடீரென வந்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற துப்பாக்கிப் பிரயோகம் அண்மையில் ஏற்பட்டபோது இம் மண்டபத்திலிருந்த பிரயாணிகள் உயிரைக் கையில்பிடித்தவர்களாய் நிலத்தில் விழுந்து படுத்துக் கொண்டதால் தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டனராம்.

# முழுமையான போராட்டத்தில் பங்குபற்றுவோரை பிளவுபடுத்துவதே துண்டுப் பிரசுரத்தின் நோக்கம்

வானத்திலிருந்து ஹெலிகப்டர் மூலம் கடந்தசில நாட்களாக போடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்று சம்பந்தமாக பேராசிரியர் கா. சிவத்தம்பி நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை இங்கு முழுமையாகத் தரப்படுகிறது.

என்னைப் பற்றிய குறிப்புகள் கொண்ட - பெயரிடப்படாத- இடம் திகதி இடப்படாத- ஒரு துண்டுப்பிரசுரம் ஹெலிகொப்டர்களிலிருந்து போடப்பட்டதாக அறிந்தேன். அதன் பிரதி ஒன்று மிகப் பிந்தியே என் கைக்குஎட்டியுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்திலே கூறப்பட்டுள்ளவை முற்றிலும் பொய்யானவை என்றும், உண்மைக்குப் புறம்பானவை என்றும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தமிழர் உரிமைக்காகப் பாடுபடும் எவருடனும் எனக்கு எவ்வித முரண்பாடும் இல்லை என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

ஹெலிகொப்டரிலிருந்து யார், எவற்றைப் போடுவார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்ததே. துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்ட பொழுது (மட்டக்களப்பு, வன்னிப் பகுதிகளில்) அவை எதற்காக, எத்தனை கயிறுதிரிப்புக்களுடன் செய்யப்பட்டன என்பதும் நமக்குத் தெரிந்ததே.

ஒவ்வொருமுறையும் அவற்றின் நோக்கம், தமிழரின் ஒற்றுமையைக் குலைப்பதும், மனோதிடத்தைக் குறைப்பதுமேயாகும். இப்பொழுது விழுந்துள்ள இந்தத் துண்டும் அதே நோக்குடையதே. இதில் பொய்களும், திரிபுகளுமே இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்களின் முழுமையான போராட்டத்திற் பங்குபற்றுவோரைப் பிளவுபடுத்துவதும் அந்நியப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும். நடக்காதனவற்றை நடந்ததாக முழுப் பொய் கூறுகின்றது.

வல்வைப பிரஜைகள் குழுவின் நிர்வாகக்குழுவினர் பதவியிலிருந்து விலகியதை வைத்துக் கொண்டே இந்தக் கயிறு திரிப்பு நடந்துள்ளது.

நான், ஏற்கனவே, சுகவீனம் காரணமாகவும், பல்கலைக்கழக அலுவலகள் காரணமாகவும் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதற்கான எனது விருப்பினை 24-2-86 அன்று நடந்த செயற்குழுக் கூட்டத்திலேயே அறிவித்திருந்தேன். அச்செய்தி பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

பின்னர் பிரஜைகள் குழுக்கள் வரன்முறையான பிரதிநிதித்துவமுறையிலே தெரிவு செய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது தொடக்ககாலச் செயற்குழு என்றவகையிலே தமது பணி நிறைவேறியதாகக் கருதியே பிரஜைகள் குழுவின் அந்த நிர்வாகக் கமிட்டி விலகிக் கொண்டது. இது பொதுக் கூட்டத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

உண்மைகளைத்திரித்துக் கூறுவதால் தமிழ் மக்களை-அதுவும் இன்று - திசைதிருப்பலாமென விமானத்துண்டுகள் எதிர்பார்ப்பின், அது மிகத் தவறான ஒன்றாகும்.

தமிழ் மக்கள் மீது அரச படைகள் நடத்தும் கொலை, அட்டூழியங்களை நியாயப்படுத்தப்பார்க்கும் ஒரு வக்கிரமான, குரூரமான உள்நோக்கம் அந்தத துண்டுப் பிரசுரத்தில் தொனிக்கின்றது.

அரசபடையினர் தமிழ் மக்கள் மீது நடத்தும் தாக்குதல்களும், அட்டூழியங்களும்,வதைகளுமே தமிழ் மக்களின் முற்றுமுழுதானஎதிர்ப்புக்குக்காரணமாக அமைந்துள்ளன. அரச ஒழுங்குமுறையின் சின்னமாகவும், அதன்நடைமுறையாகவும் அமைந்துள்ளன- அரசபடையின் செயல்கள் இந்த ஒழுங்குமுறைக்கெதிரான போராட்டத்திற் சகல தமிழரும் பங்காளிகளே.

இந்த அடக்குமுறைக்கும், ஒடுக்குமுறைக்கும், தாக்குதல்களுக்கும், அட்டூழியங்களுக்கும், வதைகளுக்கும் எதிராக நான் குரல் கொடுத்துவந்துள்ளமை தமிழ்பேசும் மக்களுக்குத் தெரிந்ததே. படையினரின் அத்துமீறல்களையும் அட்டூழியங்களையும் வன்மையாகக் கண்டித்ததும், அவை காரணமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புககுழுவிலிருந்து நான் ராஜினாமாச் செய்ததும் தெரிந்ததே.

மேலேயிருந்துவிழும் இந்த துண்டுப்பிரசுரத்துக்கு என்ன மதிப்புக்கொடுக்க வேண்டுமென்பது பற்றி நான் எதுவும் கூற வேண்டியதில்லை. தில்லுமுல்லுகள் என்றுமே வென்றதில்லை.

மரண அறிவித்தல்

செ. இராசா, ஜே. பி.

திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த, யாழ். சன்மார்க்க வித்தியாசாலையின் கனிஷ்ட பிரிவு ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் செ. இராசா, ஜே.பி. காலமானார். இவர் ஒய்வுபெற்ற ஆசிரியை சின்னத்தங்கத்தின் கணவரும், ராஜ்குமார் (சென்னை), ரஞ்சனா (ஆசிரியை, முத்துத்தம்பி வித்தியாசாலை) ராஜமோகன் (சென்னை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், சாருகேசி (சென்னை) ஆகியோரின் அருமை மாமனாருமாவார். மரணச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

B/1431

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-07-1986 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437

## இன்று கூட்டம்

பிரஜைகள் குழுவின் இணைப்புக்குழு கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு நல்லூர் இந்து விடுதி மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### தற்போதைய ...

ராது செயல்படும் தனிநபர்களது செயற்பாடுகளையும் கண்டு அஞ்சுவதும், குழப்புவதும் தெளிவானஅரசியல்நோக்குடன் செயல்படாது மக்களை ஏமாற்றும்நடவடிக்கையாகும்.

விடுதலைப் பயணத்தில் கொள்கை, நடைமுறை தொடர்பான முரண்பட்ட கருத்துக்கள் உருவாவது தவிர்க்க முடியாததே. இவற்றை சரியான முறையில் அரசியல் ரீதியில் தீர்ப்பதன் மூலமே எம்மைநாம் திருத்திக்கொண்டு பொறுப்புள்ள முறையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கலாம்என்பதில்தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினராகிய நாம்தெளிவாகவும்,உறுதியாகவும் உள்ளோம். இதற்குப்புறம்பானமுறையில்செயற்படுபவர்களுடையநடவடிக்கைகளை நாம்முற்றாக நிராகரிக்கின்றோம். களத்தில் விடுதலைப் போராட்டத்தைச் சரியான முறையில் முன்னெடுப்பதற்குரிய அனைத்து வேலைத்திட்டங்களிலும்உறுதியாய்செயற்படும் அதேவேளை மக்களுடனும் இணைந்து செயற்படுவோம்.

மக்களுடைய விமர்சனங்களை நாம் கவனத்திற் கொண்டு எம்மைத் திருத்திக் கொண்டு விடுதலைக்கான வேலைகளில் ஈடுபடுவோம்.

தன்னிச்சையாகவும், தனிநபர் முரண்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு கழகத்தின் பெயரால் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளிலும் மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

### வீரசூரியா ...

படுகிறது.

பாலைதீவுக்கும், இரணைதீவுக்கும் இடைப்பட்ட எலிக்கந்தன் முனை என்னும் இடத்தில்நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் கப்பல் நங்கூரம்இட்டு நின்றதாக சிறுதொழில்செய்து வரும் மீனவர்கள் தெரிவித்தனர்.

மாமடுவ சாரதி சொல்கிறார்:

## 25 அடிக்கு அப்பால் நான் தூக்கி எறியப்பட்டேன்!

"பிரப்பமடுவிலிருந்து வவுனியாவை நோக்கி வந்து கொண்டிருக்கையில் காட்டு மாங்குளம் சுடலைக்கருகில் பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. இதனையடுத்து பஸ்ஸிலிருந்தவர்கள் தூக்கி எறியப்பட்டார்கள். எங்கும் ஒரே புகைமண்டலமாக விருந்தது, நான் பஸ்ஸிலிருந்து சுமார் இருபத்தி ஐந்து அடிக்கப்பால் வயல் வெளியில் தூக்கியெறியப்பட்டேன்".

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை மாமடுவைக்கருகில் கண்ணிவெடியில் சிக்கிய பஸ் வண்டியை செலுத்திச் சென்ற சாரதி திரு. செல்லத்துரை (35) ஈழமுரசுக்குத் தெரிவித்தார். யாழ்.வைத்தியசாலையில் இவர் இப்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

"சம்பவம் நடந்த இடத்திலிருந்து அரைமைல் தூரத்திற்குள்தான் மாமடுவ இராணுவ முகாமுள்ளது. எனினும் சம்பவம் நடந்து சுமார் ஒரு மணி நேரமாக எமக்கு உதவுவதற்கு அச்சம் காரணமாக எவரும் முன்வரவில்லை. பின்னர் ஹெலிகப்டர் மூலம் காயமடைந்த நாம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் எப்படி உங்களை கவனித்தார்கள் என்று கேட்டதற்கு "நான் தமிழன் என்று தெரிந்து கொண்டதின் பின்னரும் நல்ல முறையில் வைத்திய சிகிச்சை அளித்தார்கள். அங்கு எனக்கு வழங்கப்பட்ட வைத்திய சிகிச்சைபற்றியாழ், வைத்தியசாலை வைத்தியர்கள் திருப்தி தெரிவித்தார்கள்" என செல்லத்துரை தெரிவித்தார்.

சம்பவம் நடந்த சமயம் குண்டுத் தாக்குதலுக்குள்ளான சிறிய ஒற்றைக் கதவு பஸ்ஸினுள் அறுபது பயணிகள் வரையிலிருந்ததாகவும், பஸ் வண்டி முற்றாகவே சேதமடைந்ததாகவும் அவர் சொன்னார்.

## அரியம் பிறந்தநாள் விழா

கம்யூனிஸ்ட் கட்சியின் முது பெருந்தலைவர்களில் ஒருவரான ஐ. ஆர். அரியரத்தினத்தின் எழுபதாவது ஆண்டு நினைவு விழா இன்று மாலை மூன்று மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் திருவாளர்கள் அ. வைத்திலிங்கம், வீ. அற்புதரத்தினம், எம். சி. சுப்பிரமணியம், டொமினிக்ஜீவா, கலாநிதி சோ. கிருஷ்ணராசா ஆகியோர் உரையாற்றுவர்.

### மீனவரை ...

வம் உடுத்துறை என்னுமிடத்தில் இடம்பெற்றுள்ளது. உடுத்துறையைச் சேர்ந்த இ. சந்திரலிங்கம் (ஐயன்), கந்தசாமி என்னும் மீனவர்களேமேற்படி சம்பவத்திற்குள்ளாயினர். எவ்வளவோ முயற்சிகள் செய்தும் இவர்களைப் பற்றிய எதுவித தகவல்களையும் பெறமுடியாத நிலையில் இவர்களின் உறவினர்கள் கவலையுடன் தவிக்கின்றனர்.

### அனுமதி அட்டை...

க்கப்பெறாத பெரும்பாலான மாணவர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வந்துள்ள மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை 30ம் திகதி புதன் கிழமை கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

### கிளிநொச்சியில் ...

ஊர்வலங்கள் முரசுமோட்டையை நோக்கிவர சுமார் ஆறு மைல் நீளத்துக்கு ஒரே மக்கள் வெள்ளமாக காட்சியளித்தது.

'மாகாண சபையை எதிர்ப்போம்', 'மாகாணசபை எனும் மாயையைக் காட்டி தமிழ் மக்களைக் கொலை செய்யத் திட்டமா?' என்று எழுதப்பட்ட சுலோகங்களுடன், 'கிளிநொச்சியில் இராணுவ முகாமை மாற்று, அல்லது அரச அலுவலகங்களை மாற்று', 'அப்பாவி விவசாயிகளைக் கொலை செய்யாதே' என்று எழுதப்பட்ட பல சுலோக அட்டைகளையும் தாங்கிய வண்ணம் சுமார் இருபதாயிரம் மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட வான்கள், ட்ராக்டர்களுடன் ஆயிரக்கணக்கான சைக்கிள்களும் ஊர்வலத்தைப் பின்தொடர்ந்து சென்றன. இவ்வூர்வலங்கள் இறுதியில் முரசுமோட்டை மைதானத்தில் சங்கமித்து ஒரு கண்டனக் கூட்டத்தையும் நடத்தின. இக்கூட்டத்திற்கு கண்டாவளை அத்தியாவசிய சேவைக்குழுத் தலைவர் திரு. வே. ஐயாத்துரை அவர்கள் தலைமை வகித்தார். கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கிளிநொச்சியைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பொது ஸ்தாபனங்ககளும், வெகுசன அமைப்புகளும் கலந்துகொண்டன.

### படகுடன் ...

திற்கு கொண்டு சென்று விசாரணை செய்தனராம்.

விசாரணையின் பின்னர் குறித்த படகில் சென்ற மாணவர்களும், பெற்றோர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக புலிகளின் குரல் ஒலிபரப்பு நேற்று மாலை அதன் செய்தியறிக்கையில் தெரிவித்தது.